ஸ்ரீ:

விகாரி ஞூ சித்திரை மீ
ஏப்ரல் - மே 2019

மலர்: 2
இதழ்: 1

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்



MONTHLY NEWSLETTER FROM:
**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**

MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799,
Email : svdd.mylai@gmail.com, web: www.svdd.com



ஸ்ரீ:

விகாரி வருஷ சித்திரை மீ
ஏப்ரல் - மே 2019

மலர்: 2
இதழ்: 1



ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

### காலை

| ஞாயிறு முதல் புதன் வரை | | | வியாழன் முதல் சனி வரை | | |
|---|---|---|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் | 6.00 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் | 7.30 | - | பொது தரிசனம் |
| 9.45 | - | சாற்றுமுறை | | | |

12.00 - உச்சிகாலம்

### மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 8.00 - திருவாராதனம், 9.00 - சயநம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**

1. ஸ்ரீ R. முகுந்தன் 2. ஸ்ரீ P. சேஷாத்ரி 3. ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன்

**Editorial Board :**

ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Photo Courtesy: Sri Rajagopalan Madhavan & Sri P.S. Anand
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay,



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 24953799
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்3ரி ஸமம் ஸ்தா2நம் ப்3ரஹ்மாண்டே3 நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே3வோ ந பூ4தோ ந ப4விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள் !

பங்குனி மாதம் பருப்பு-கல்யாணம் என்பார்கள். இங்கே குறிக்கப்படுவது ஸாதாரண கல்யாணத்தை அல்ல – திவ்ய தம்பதிகளின் திருக்கல்யாண விழாவை. பங்குனி உத்திர நக்ஷத்ரத்தில் கொண்டாடப்படும் இத்திருவிழா, நம் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தின் மிக உயர்ந்த கொள்கையான ‘ஆச்ரயண வேளையோடு - போக வேளையோடு வாசியற, ஒரு மிதுநமே உத்தேச்யம்’ என்பதனைக் குறிக்கும் உத்ஸவமாகும். இதைப் பற்றிய விஷயங்களை ஒரு விசேஷக் கட்டுரை வடிவில் சென்ற பதிப்பில் படித்து இன்புற்றோம்; இந்த ஸஞ்சிகையில், நம் திருமயிலை தேசிகனுக்கு ஸேவை ஸாதிக்கும் ஸ்ரீ அலர்மேல்மங்காநாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமானின் திருக்கல்யாண உத்ஸவத்தின் நிழற்படத்தையும்; அதை தொடர்ந்து ஸ்ரீகோதா ஸமேதனாக எம்பெருமானின் ஊர்கோல உத்ஸவத்தின் காக்ஷிகளையும் கண்டு, க்ருதார்த்தராகலாம், வாரீர்!

இப்பதிப்பில் இடம்பெறும் மற்றைய விழாக்களின் நிழற்படங்களாவன :-

- திருக்கச்சி நம்பிகள் வார்ஷிகோத்ஸவம்
- யுகாதி உத்ஸவம்
- ஸ்ரீராம நவமி உத்ஸவங்கள்
- பங்குனி ச்ரவணப் புறப்பாடு
- இதனை முன்னிட்டு நடந்த கல்யாணபுரம் ஸ்ரீ ஆராவமுதாசார்யரின் ஸ்ரீமத் ராமாயண ஸங்கீத தொடர் உபந்யாஸம்

இத்துடன், சித்திரையில் ஆதிரைநாள் அவதரித்த பெரும்பூதூர் வள்ளல் பெருமை உரைக்கும் விசேஷக் கட்டுரை; அன்னாரைப் புகழும் ஸ்ரீயதிராஜஸப்ததி ஸ்தோத்ரத்தில், நம் ஸ்வாமி தேசிகன் கையாண்ட ‘சிலேடை நய’த் திவலைகள்; மற்றும் நம் தேவஸ்தாந வேதபராயண கைங்கர்யத்தில் அயராது ஈடுபட்டிருக்கும், வேதபாராயண ஸபையின் தோற்றம் முதல் இன்று வரையிலான விவரங்கள் அடங்கிய கட்டுரை, இவைகளும் இடம் பெறுகின்றன.

முதல் ஆண்டு நிறைவு காணும் இத்தருணத்தில், வாசகர்களின் தொடர்ந்த ஆதரவை விழையும்...

***தேஶிக ஸந்தேஶம்***

ஸ்ரீ:

# விகாரி வருட சித்திரை மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி ஏப்ரல்/ மே | தமிழ் தேதி சித்திரை | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயதாரர் |
|---|---|---|---|---|---|---|
| 14.04.19 | 1 | நவமி / தசமி | ஞாயிறு | ஆயில்யம் | விகாரி – தமிழ் வருஷப்பிறப்பு – சித்திரை விஷு புண்யகாலம் – பெருமாள், தாயார் மூலவர், உத்ஸவர், தேசிகன், திருமஞ்சனம். மதியம் ஸ்ரீ இராமர் மூலவர் – உத்ஸவர் திருமஞ்சனம் மாலை – பொழுதுடன் திருஆராதனம் – பெருமாள் வீதிபுறப்பாடு, இராமர் வீதி புறப்பாடு | வருஷப்பிறப்பு – P.D.R. ட்ரஸ்ட், ஸ்ரீ இராமர் உத்ஸவம் – ஸ்ரீமதி அம்புஜம் அனந்தராமன் (VDR Fund) |
| 15.04.19 | 2 | ஏகாதசி | திங்கள் | மகம் | காலை பெருமாள் – உத்ஸவர் திருமஞ்சனம். மதியம் ஸ்ரீ இராமர் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை பெருமாள், இராமர் ஊர்கோல உத்ஸவம் வீதிபுறப்பாடு | ஏகாதசி உத்ஸவம் – ஸ்ரீ.K.S. கோவிந்தபிரசாத், இராமர் பட்டாபிஷேகம் ஸ்ரீ K.J. சுகுமார் |
| 16.04.19 | 3 | த்வாதசி | செவ்வாய் | பூரம் | ஸ்ரீ ஆண்டாள் | |
| 17.04.19 | 4 | த்ரயோதசி | புதன் | உத்திரம் | தாயார் திருமஞ்சனம் – உள்புறப்பாடு | ஸ்ரீ S.V.S. இராகவன் |
| 18.04.19 | 5 | சதுர்த்தசி | வியாழன் | ஹஸ்தம் | திருஅவதார உத்ஸவம் – பெருமாள், தாயார் மூலவர் – உத்ஸவர் திருமஞ்சனம், மாலை பொழுதுடன் திருஆராதனம். பின்பு பெருமாள் மங்களகிரியில் வீதி புறப்பாடு. இரவு மாம்பலம் எழுந்தருளல் | திருமஞ்சனம் – S.V.D.D. கைங்கர்யபரர்கள், புறப்பாடு – ஸ்ரீ L.V. நரசிம்மன் |
| 19.04.19 | 6 | பௌர்ணமி | வெள்ளி | சித்திரை | சித்ரா பௌர்ணமி (மதுரகவி ஆழ்வார் சாற்றுமுறை) | சித்ரா பௌர்ணமி கமிட்டி |
| 20.04.19 | 7 | ப்ரதமை | சனி | ஸ்வாதி | ஸ்ரீ லக்ஷ்மிநரசிம்ஹர் | |
| 21.04.19 | 8 | த்விதீயை | ஞாயிறு | விசாகம் | நம்மாழ்வார் | |
| 22.04.19 | 9 | திருதீயை | திங்கள் | அநுஷம் | நாதமுனிகள் | |
| 23.04.19 | 10 | சதுர்த்தி | செவ்வாய் | கேட்டை | தொண்டரடிபொடிகள் | |
| 24.04.19 | 11 | பஞ்சமி | புதன் | மூலம் | திருமால்வடை | |
| 25.04.19 | 12 | ஷஷ்டி | வியாழன் | பூராடம் | சேனைநாதன் | |
| 26.04.19 | 13 | ஸப்தமி | வெள்ளி | உத்ராடம் | தாயார் திருமஞ்சனம். மாலை தாயார் யானை வாஹனத்தில் உள் புறப்பாடு | ஸ்ரீ மாடபூசி சுதர்சனம் ஐயங்கார் பண்டு |
| 27.04.19 | 14 | அஷ்டமி | சனி | ச்ரவணம் | காலை பெருமாள், தேசிகன் திருமஞ்சனம். மாலை வீதிபுறப்பாடு. இரவு ஆஸ்தானம், சாற்றுமுறை | ஸ்ரீ N.S. ஸ்ரீனிவாசன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 28.04.19 | 15 | நவமி | ஞாயிறு | அவிட்டம் | திருமால்வடை | |
| 29.0419 | 16 | தசமி | திங்கள் | அவிட்டம்<br>(01.07) | பூதத்தாழ்வார் | |
| 30.04.19 | 17 | ஏகாதசி | செவ்வாய் | சதயம் | ஸ்ரீபாஷ்யக்காரர் உத்ஸவம் முதல் நாள். காலை வீதிபுறப்பாடு. பின்பு பெருமாள், பாஷ்யகாரர் திருமஞ்சனம். இரவு பாஷ்யகாரர் ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஏகாதசி – பழவேரி ஸ்ரீ லக்ஷ்மிநரசிம்மாச்சார், ஸ்ரீ பாஷ்யகாரர் – நெம்பிலி வீரவல்லி குடும்பத்தினர், சதயம் – S.V.S.K. அஸோஸியேஷன் |
| 01.05.19 | 18 | த்வாதசி | புதன் | பூரட்டாதி | ஸ்ரீபாஷ்யகாரர் உத்ஸவம் 2ஆம் நாள். காலை வீதிபுறப்பாடு. இரவு ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ புரிசை ராமகிருஷ்ணன் |
| 02.05.19 | 19 | த்ரயோதசி | வியாழன் | உத்திரட்டாதி | ஸ்ரீபாஷ்யகாரர் உத்ஸவம் 3ஆம் நாள். காலை வீதிபுறப்பாடு. இரவு ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ V.R. ராஜகோபால் ஐயங்கார் குடும்பத்தினர் |
| 03.05.19 | 20 | சதுர்த்தசி | வெள்ளி | ரேவதி | ஸ்ரீபாஷ்யகாரர் உத்ஸவம் 4ஆம் நாள். காலை வீதிபுறப்பாடு. தாயார், பாஷ்யகாரர் திருமஞ்சனம் மாலை தாயார் உள்புறப்பாடு. இரவு ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | தாயார் உத்ஸவம் – ஸ்ரீ மாடபூசி சுதர்சனம் ஐயங்கார் பண்டு, பாஷ்யகாரர் உத்ஸவம் – ஸ்ரீ தள்ளம் S. ரகுநாதாச்சார் |
| 04.05.19 | 21 | அமாவாசை | சனி | அச்வினி | ஸ்ரீபாஷ்யகாரர் உத்ஸவம் 5ஆம் நாள். காலை வீதிபுறப்பாடு. பின்பு பெருமாள், பாஷ்யகாரர் திருமஞ்சனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு. இரவு பாஷ்யகாரர் ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | அமாவாசை உத்ஸவம் – ஸ்ரீ உ.வே. திருக்கண்ணமங்கை தேவநாதாச்சார் குடும்பத்தினர், பாஷ்யகாரர் – ஸ்ரீ T.R. தேவநாதாச்சார் |
| 05.05.19 | 22 | ப்ரதமை | ஞாயிறு | பரணி | ஸ்ரீபாஷ்யகாரர் உத்ஸவம் 6ஆம் நாள். காலை வீதிபுறப்பாடு. வஸந்த உத்ஸவம் முதல்நாள். காலை பெருமாள், தாயார் பாஷ்யகாரர், தேசிகன் திருமஞ்சனம். மாலை பெருமாள், தாயார், தேசிகன், பாஷ்யகாரர் ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | பாஷ்யகாரர் உத்ஸவம் – ஸ்ரீ வஸந்த் ஷான்பாக், வஸந்த உத்ஸவம் – ஸ்ரீ R. நாராயணன், ஸ்ரீ K. சுதர்சனம் |
| 06.05.19 | 23 | த்விதீயை | திங்கள் | கார்த்திகை | ஸ்ரீபாஷ்யகாரர் உத்ஸவம் 7ஆம்நாள். காலை வீதிபுறப்பாடு. வஸந்த உத்ஸவம் 2ஆம்நாள். காலை பெருமாள், தாயார் பாஷ்யகாரர், தேசிகன் திருமஞ்சனம். மாலை பெருமாள், தாயார், தேசிகன், பாஷ்யகாரர் ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | பாஷ்யகாரர் உத்ஸவம் – ஸ்ரீமதி ஹேமலதா ரமாமணி, வஸந்த உத்ஸவம் – ஸ்ரீ R. நாராயணன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 07.05.19 | 24 | திருதீயை | செவ்வாய் | ரோஹிணி | அக்ஷய த்ருதீயை, ஸ்ரீபாஷ்யகாரர் உத்ஸவம் 8ஆம்நாள். காலை வீதிபுறப்பாடு. வஸந்த உத்ஸவம் 3ஆம் நாள். காலை பெருமாள், தாயார் பாஷ்யகாரர், தேசிகன் திருமஞ்சனம். மாலை பொழுதுடன் திருவாராதனம். பின்பு பெருமாள், தேசிகன் அலர்மேல்மங்கா புரம் எழுந்தருளல் | பாஷ்யகாரர் உத்ஸவம் – ஸ்ரீ R. முகுந்தன் – வஸந்த உத்ஸவம் – ஸ்ரீ R. சந்திரசேகரன் |
| 08.05.19 | 25 | சதுர்த்தி | புதன் | ம்ருகசீர்ஷம் | ஸ்ரீபாஷ்யகாரர் உத்ஸவம் 9ஆம் நாள். காலை வீதிபுறப்பாடு. திருமஞ்சனம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ T.C. ரங்கராஜன் – ஸ்ரீ T.C. ஸ்ரீநாத் |
| 09.05.19 | 26 | பஞ்சமி | வியாழன் | திருவாதிரை | ஸ்ரீபாஷ்யகாரர் திருநக்ஷத்ரம். காலை – மங்களாசாசனம், வீதி புறப்பாடு – பெருமாள், பாஷ்யகார் திருமஞ்சனம் – மாலை – பெருமாள், பாஷ்யகார் வீதிபுறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | மங்களாசாஸனம் – ஸ்ரீ S. சுந்தரம், காலை – மாலை – பாஷ்யகாரர் உத்ஸவம் – A.S.V. சாரிடீஸ் |
| 10.05.19 | 27 | ஷஷ்டி | வெள்ளி | புனர்வஸு | காலை தாயார் உத்ஸவர் திருமஞ் சனம். மாலை தாயார் தங்கக் கேடயத்தில் உள்புறப்பாடு | ஸ்ரீ மாடபூசி சுதர்சனம் ஐயங்கார் பண்டு |
| 11.05.19 | 28 | ஸப்தமி | சனி | புஷ்யம் | தோட்ட உத்ஸவம், திருமால்வடை | ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன் |
| 12.05.19 | 29 | அஷ்டமி | ஞாயிறு | ஆயில்யம் | திருமால்வடை | |
| 13.05.19 | 30 | நவமி | திங்கள் | மகம் | திருமழிசையாழ்வார் | |
| 14.05.19 | 31 | தசமி | செவ்வாய் | பூரம் | ஸ்ரீ ஆண்டாள் | |

## சித்திரையில் முக்கிய உத்ஸவங்கள்

- **சித்திரை வருஷப்பிறப்பு, ஸ்ரீராம நவமி**
  ஏப்ரல் 14 (ஞாயிறு)
- **ராமர் பட்டாபிஷேகம்**
  ஏப்ரல் 15 (திங்கள்)
- **திரு அவதார உத்ஸவம்**
  ஏப்ரல் 18 (வியாழன்)
- **சித்ரா பௌர்ணமி உத்ஸவம், மதுரகவிகள் திருநக்ஷத்ரம்**
  ஏப்ரல் 19 (வெள்ளி)
- **ஸ்ரீபாஷ்யகாரர் உத்ஸவம் (10 நாட்கள்)**
  ஏப்ரல் 30 (செவ்வாய்) முதல்
  மே 9 (வியாழன்) வரை
- **வஸந்த உத்ஸவம் (3 நாட்கள்)**
  மே 5 (ஞாயிறு) முதல்
  மே 7 (செவ்வாய்) வரை
- **அக்ஷய த்ருதீயை உத்ஸவம்**
  மே 7 (செவ்வாய்)
- **ஸ்ரீபாஷ்யகாரர் திருநக்ஷத்ரம்**
  மே 9 (வியாழன்)

# பெரும்பூதூர் வந்த வள்ளலின் பெருங்கருணை

ஸ்ரீமதி ரமா ராகவஸிம்ஹன்

*என்னுயிர் தந்தளித்தவரைச் சரணம் புக்கு*
*யானடைவேன் அவர்குருக்கள் நிறை வணங்கிப்*
*பின்னருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல்*
*பெரியநம்பி ஆளவந்தார் மணக்கால் நம்பி*
*நன்னெறியை அவர்க்குரைத்த உய்யக்கொண்டார்*
*நாதமுனி சடகோபன் சேனைநாதன்*
*இன்னமுதத் திருமகள் என்றிவரை முன்னிட்டு*
*எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே.*

நமது பூர்வஜன்ம கர்மாக்களைக் கழிப்பதற்கென ஸ்ரீமந்நாராயணனின் சொத்தாம் ஆத்மாவை அபஹரணம் பண்ணி, ஒரு தேஹத்தினைக் கொண்டு இந்த பூமியில் ஜனித்திருக்கின்றோம். சலனமற்ற ஆசார்ய பக்தி ஒன்றே அவனது சொத்தான ஆத்மாவை அவனிடமே ஸமர்ப் பிப்ப தற்கான உபாயமாகும். இன்னின்ன ஆசார்யன் திருவடிகளைச் சரணடைந்து (‘என்றி வரை முன்னிட்டு’), ஸ்ரீமன் நாராயணனின் திருவடிகளை அடைகின்றேன் (‘எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே’) என்ற மேற்கண்ட வரிகளே இதற்கு ப்ரமாணமாக அமைகின்றன. ஆச ார்ய பக்தி என்பது கர்மபத்தர்களாகிய நாமெல்லாம் உய்வதற்கான முழுமுதல் உபாயமாகும். ஸ்ரீவைஷ்ணவ தர்மமானது ஆசார்ய பக்தியினைப் பற்றிப் பலவிதமான க்ரந்தங்கள், புராணங்கள், ச்லோகங்கள் மற்றும் பாசுரங்கள் மூலம் பரக்கப் பேசுகின்றது.

வைணவத் திருத்தலங்களில், அநாதி காலமாக இன்று வரை, ஸ்ரீராமாநுஜர் நமக்கு வகுத்துக் கொடுத்த கோட்பாடுகளும் வழிமுறைகளுமே தொய்வில்லாது பின்பற்றப்படுகின்றன. சங்கர, யாதவ, பாட்ட, ப்ரபாகரர் ஆகியோரது மதம் சாய்வுற, ஸ்ரீவைஷ்ணவ தர்மத்தின் உயர்வதனை வாதிட்டு வென்றவர் ஸ்ரீ ராமாநுஜர். சதுர்மறைகளும் செழித்தோங்கி வாழ்வாங்கு வாழ்ந்திட, தம்முடைய உயர் ஞானத்தினைக் கொண்டு, அசைக்கவொண் ணா த்ருடத்துடன் ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தங்களை பரப்பியவர் பெரும்பூதூர்ச் சீமான் இளையாழ்வார் ஸ்ரீராமாநுஜர்.

ஸ்ரீராமாநுஜர் மீது கொண்டிருந்த எல்லையில்லாத ஆசார்ய பக்தியினால் திருவரங்கத்தமுதனார் அருளிச் செய்த 108 பாசுரங்களின் தொகுப்பு தான் இராமானுச நூற்றந்தாதி. ‘ப்ரபந்ந காயத்ரீ’ என்று போற்றப்படும் இந்தப் பாசுரங்களை அநுதினமும் பாராயணம் செய்பவர்களுக்கு, ஆசார்ய அநுக்கிரஹம் பரிபூர்ணமாகக் கிட்டும் என்பதில் ஐயமேதுமில்லை. ஈடு இணையில்லாத குரு பரம்பரை ப்ரபாவத்தை மிகத் தெளிவாக விளக்கும், அர்த்தபுஷ்டி வாய்ந்த மேற்கண்ட வரிகளை அநுஸந்தித்து, இராமானுச நூற்றந்தாதியின் பேரழகில் ஈடுபடுவோம்.

**ஆறாம் பாசுரம்**

*இயலும் பொருளும் இசையத் தொடுத்து ★*
*ஈன் கவிகள் அன்பால்*
*மயல் கொண்டு வாழ்த்தும் இராமானுசனை ★*
*மதியின்மையால்*
*பயிலும் கவிகளில் பத்தி இல்லாத*
*என்பாவி நெஞ்சால்*
*முயல்கின்றனன் ★*
*அவன் தன் பெருங்கீர்த்தி மொழிந்திடவே,*

‘ஆசார்ய பரம்பரையில், ப்ரபந்த நிர்த்தாரணம் பண்ணுகின்ற, உயர்ஞானம் கொண்ட விலக்ஷண மான சிரோன்மணிகள் பலர் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் அவதரித்துள்ளனர். இவர்கள் ஸ்ரீராமாநுஜர் மீது கொண்ட அன்பானது மையலாகி (‘அன்பால் மயல் கொண்டு’), ராகத்துடன் இசைக்க வல்ல சப்தமும் பொருளும் உடைய (‘இயலும் பொருளும் இசையத் தொடுத்து’) உயர்ந்த பல வார்த்தைகளால் அவரைக் கொண்டாடுகின்றனர். இத்தகைய ஒப்பில்லா மங்களாசாஸனங்களை நித்தம் அநுஸந்தித்து, ஸ்ரீ ராமாநுஜரின் ப்ரபாவத்தினை ஸதா சிந்தனை செய்து கொண்டிருப்பதினை விடுத்து, இந்த நூற்றந்தாதியினை இயற்ற முற்படுகின்றேனே. என்னே திண்ணக்கம் அடியேனுக்கு!’

‘ஸமய ஜ்ஞானம் தான் இல்லையென்றாலும் மூடபக்தியென்பதுமே இல்லாத மனதினைக் கொண்டவனான என்னுள் (‘பத்தி இல்லாத என் பாவி நெஞ்சால் முயல்கின்றனன்’),



ஸ்ரீ ராமானுஜரின் நிரவதிகமான கீர்த்தியினை அடியேனாலும் பரக்கக் கூற முடியும் என்ற எண்ணம் விளைந்ததே. இப்படி ஒரு ஸாஹசம் பண்ணத் துணிந்தது அடியேனுடைய பாபிஷ்டமான மனசில் விளைந்த உத்ஸாஹத்தினால் தானே' என்று திருவரங்கத்தமுதனார் அங்கலாய்ப்பது இந்தப் பாசுரத்தில் தெளிவுபடத் தெரிகின்றது.

என்னே திருவரங்கத்தமுதனாரின் ஆசார்ய பக்தி! என்னே அவரது ஸ்வநைச்யம்! என்னே ஸ்ரீ ராமானுஜரின் ப்ரபாவம்!

**பதினைந்தாம் பாசுரம்**

*சோராத காதல் பெருஞ்சுழிப்பால் ★*
*தொல்லை மாலை ஒன்றும்*
*பாராது அவனைப் பல்லாண்டென்று காப்பிடும் ★*
*பான்மையன் தாள்*
*பேராத உள்ளத்து இராமானுசன்*
*தன் பிறங்கிய சீர்*
*சாரா மனிசரைச் சேரேன் ★*
*எனக்கு என்ன தாழ்வினியே.*

எவ்வளவு உயர்ந்த வரிகளிவை! 'சோராத காதல் பெருஞ்சுழிப்பால் தொல்லை' – ஸ்ரீமன் நாராயணன் மீது பெரியாழ்வார் கொண்டிருந்த அயர்வில்லாத, வாட்டம் என்பதனையே அறியாத உயர்நிலை பக்தியினால் 'பெருஞ்சுழி' ஒன்றினுள் அவர் சிக்கிக் கொண்டாராம். அதென்ன 'பெருஞ்சுழி'? அதீதமான பக்தியினால் உண்டாகும் மனமயக்கம் தான் இங்கு 'பெருஞ்சுழி' எனப்படுகின்றது. இத்தகைய பெருஞ்சுழியுனுள் சிக்கிக் கொண்டதனால் பெரியாழ்வார் 'தான் யார் அவன் யார்' என்பதையெல்லாம் புறம் தள்ளி விட்டார் ('மாலை ஒன்றும் பாராது அவனைப் பல்லாண்டென்று காப்பிடும் பான்மையன்'). 'பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பலகோடி நூறாயிரம்' என்று அந்தப் பரமனையே வாழ்த்தி ஏத்துகின்றார்.

தம்முடைய பூர்வஜன்ம கர்மாக்களைக் கழிப்பதற்கென ஜனித்திருக்கும் ஜீவன்களையெல்லாம் கண்டு அவர்களுக்காக மன க்லேசம் கொள்ளும் காருண்யம் மிகுந்தவனான, அத்தகைய கர்மபத்தர்களுக்கும் மயர்வற மதிநலம் அருளினவனாகிய அந்த பரமாத்மனையே வாழ்த்தி, பெரியாழ்வார் திருப்பல்லாண்டு ஸாதித்தருள்கிறார் ('மாலை ஒன்றும் பாராது அவனைப் பல்லாண்டென்று காப்பிடும் பான்மையன்'). இத்தகைய பக்தி நிலையின் உச்சத்தினை உணர்ந்தவராம் பெரியாழ்வாரை தனது மனமென்னும் தாமரையில் அநுக்ஷணமும் நீங்காது த்யானிப்பவர் எம்பெருமானார் ஆவார் ('பான்மையன் தாள் பேராத உள்ளத்து இராமானுசன்'). அப்படிப்பட்ட மேன்மையினையுடைய ஸ்ரீராமானுஜரின் பாதாரவிந்தங்களைச் சரணடைந்த தனக்கு, தாழ்வு என்பதே எவ்விதத்திலும் கிடையாது என்று அறுதியிட்டு உரைக்கிறார் திருவரங்கத்தமுதனார்.

இந்தப் பாசுரத்தினை 'என்ன தாழ்வினியே' என்று ஏகாரத்தில் திருவரங்கத்தமுதனார் முடித்திருக்கும் பாங்கானது, எம்பெருமானார் மீது அவர் கொண்டிருக்கும் பக்தியின் த்ருடத்தினைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. கோதை நாச்சியார் ஸாதித்தருளிய 'நாராயணனே நமக்கே பறை தருவான்' என்பதற்கு இணையான பக்தி இங்கு மிளிர்வதைக் காணலாம்.

**இருபத்தியேழாம் பாசுரம்**

*கொள்ளக் குறைவற்று இலங்கி ★*
*கொழுந்து விட்டு ஓங்கிய உன்*
*வள்ளல் தனத்தினால் வல் வினையேன்*
*மனம் நீ புகுந்தாய் ★*
*வெள்ளைச் சுடர் விடுமுன் பெரு மேன்மைக்கு*
*இழுக்கு இது என்று*
*தள்ளூற்று இரங்கும் ★*
*இராமானுச! என் தனி நெஞ்சமே.*

உயர்வற உயர்நலம் உடையவனது பக்தராய் இருப்பதனாலே, இவ்வளவு தான் என்றில்லாமல், அள்ள அள்ளக் குறையாத அமுதமாய் ஊறும் தேவரீரின் ஔதார்ய குணமானது, எல்லையே இல்லாத ஸமுத்ரத்தினைப் போன்றது ('கொள்ளக் குறைவற்று இலங்கிக் கொழுந்து விட்டு ஓங்கிய உன் வள்ளல் தனத்தினால்'). அதனால் தான் பலவிதமான துஷ்கர்மாக்களினால் நிரம்பி வழியும் என்னுடைய ஹ்ருதயத்திலும் உம்முடைய நிரவதிகமானப்ரபாவமானது உட்புகுந்து அடியேனை ஆட்கொண்டது காண்பீர் ('குறைவற்று இலங்கிக் கொழுந்து விட்டு ஓங்கிய உன் வள்ளல் தனத் தினால் வல் வினையேன் மனம் நீ புகுந்தாய்')

பாத்ரா பாத்ர விஷயங்களை நோக்காது, ஆகிஞ்சந்ய, அநந்ய கதித்வங்களின் மாஹாத்ம்யம் தனை உயர்ந்த பல வ்யக்திகள் உஜ்ஜீவிக்கும்படி உபதேசித்தீரே! பரவாஸுதேவனின் திருவடிகளை அடைவதற்கு மார்க்கத்தைக் காட்டியவரான தங்களுடனான அடியேனின் இந்த ஸம்பந்தம் சேரா சேர்த்தியாக அமைகின்றது. பாபங்களின் மொத்த உருவமாய் உள்ள எனக்கு உம்முடன் இந்த ஸம்பந்தம் ஏற்பட்டது, தேவரீருடைய கருணையினால் தானேயன்றி வேறொரு காரணம் இல்லை.

'வெள்ளைச் சுடர் விடுமுன் பெரு மேன்மைக்கு இழுக்கு இது என்று தள்ளுற்று இரங்கும் இராமானுச! என் தனி நெஞ்சமே' – 'எம்பெருமானாரே. ஆகாச த்தில் பரிமளிக்கும் சந்த்ரனின் ப்ரகாசத்திற்கும் ஒரு களங்கமானது உண்டு. ஆனால் தேவரீருடைய தேஜஸ்ஸானது அப்ராக்ருதமானது. பரிபூரணமான பகவத்கடாக்ஷத்தினால் உண்டானது. அப்படிப்பட்ட உயர்ந்த தேஜஸ்ஸானது இருள்படிந்த எந்தன் ஹ்ருதயத்தினுள் நுழைந்ததென்பது, உம்முடைய ப்ரபாவத்திற்கு இழுக்கு சேர்க்கவல்லதோ என்று என் மனமானது அச்சம் கொள்கின்றது. ஆனால், ஸீதா பிராட்டியானவள் இலங்கைக்குள் நுழைந்ததனால் அவளுக்கு எந்த விதமான குறைவுமில்லாதது போலே, பாபிஷ்டனான எந்தன் மனம் முழுதும் பரந்து காணப்படுவதனால் எம்பெருமானாரது ப்ரபாவத்திற்கு எந்த விதத்திலும் இழுக்காகாது என்றெண்ணி என்னை நானே தேற்றிக் கொள்கின்றேன்'.

நாச்சியார் திருமொழியில் கோதை நாச்சியாரின் பதினான்கு வகையான பக்தி நிலைகள் ஸேவையாவது போலே, இந்தப் பாசுரம் திருவரங்கத்தமுதனாரின் இருவேறு பக்தி நிலை களை மிகவும் ரசனையுடன் விளக்குகின்றது.

'மேலையார்செய்வனகள்வேண்டுவனகேட்டியேல்' என்ற ஸ்ரீஆண்டாளின் திருவாக்கிற்கேற்ப, ஞானத்தில் சிறந்த ஆசார்ய சிரோன்மணிகளின் ஏற்றமிகு வாக்குவன்மையினைக் கொண்டு எம்பெருமானாரை மங்களாசாஸனம் பண்ணுவோம். அவ்வாறு நித்தம் அநுஸந்தித்து, யதிராசனுடைய திருவடிகளில் சரண்புகுவதையே உபாயமாகக் கொண்டு, கர்மபத்தர்களாகிய நாமெல்லாம் அடைய வேண்டிய உபேயமாக விளங்கும் ஸ்ரீமந் நாராயணனது திருவடிகளை அடைவோமாக!

*தேசமெலாம் உகந்திடவே பெரும்பூதூரில் ★*
*சித்திரையில் ஆதிரை நாள் வந்து தோன்றி ★*
*காசினிமேல் வாதியரை வென்று ★ அரங்கர்*
*கதியாக வாழ்ந்தருளும் எதிராசா! ★ முன்*
*பூசுரர்கோன் திருவரங்கத்தமுதனார் ★ உன்*
*பொன்னடிமேல் அந்தாதியாகப் போற்றிப்*
*பேசிய ★ நற்கலித்துறை நூற்றெட்டுப்பாட்டும் ★*
*பிழையறவே எனக்கருள் செய் பேணி நீயே.*


**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம் – ஸ்ரீ பார்த்தஸாரதி ஸபா**
**இணைந்து வழங்கும்**

**ஸ்ரீ உ.வே.**
**M.V. அனந்தபத்மநாபாசார்யர் ஸ்வாமியின்**
**'மழை தரும் மஹாத்மாக்கள்' உபந்யாஸம்**

**தேதி:** ஏப்ரல் 24 (புதன்) முதல் 28 (ஞாயிறு) வரை,
தினமும் மாலை 6.30 மணிக்கு
**இடம்:** ஸ்ரீ தேசிக வித்யா பவனம், வெங்கடேச அக்ரஹாரம், மயிலை


**Sponsorships and donations towards publication expenses are welcome**







திருக்கச்சி நம்பிகள் திருநக்ஷத்ரம்





அமாவாசை, வெள்ளிக்கிழமை புறப்பாடு



பங்குனி மாதப்பிறப்பு புறப்பாடு







பங்குனி உத்திர உத்ஸவம்









ஸ்ரீ:

## பங்குனி உத்திர உத்ஸவம்







பங்குனி உத்திர உத்ஸவம்





பங்குனி உத்திர ஊர்கோல உத்ஸவம்









ஸ்ரீ:



## யுகாதி வருஷப்பிறப்பு உத்ஸவம்







ஸ்ரீ:

# ‘ஸ்டீரியோ’ ஆசார்யர் ஸ்வாமி தேசிகன்

சுஜாதா தேசிகன், சென்னை

நாம் உபயோகிக்கும் ‘ஸ்டீரியோ டேப்ரிக் கார்டரில்’ வலது இடது என்று இரண்டு பகுதிகள் இருக்கும். வலது பகுதியில் தனியாக ஒலிப்பதிவு செய்யலாம், அதே போல் இடது பகுதியிலும் செய்யலாம்.

டேப் ஒன்று தான் ஆனால் ஒரு டிராக்கில் ஒரு பாடல், இன்னொரு டிராக்கில் இன்னொரு பாடல் என்பது போல ஸ்வாமி தேசிகனின் ஸ்ரீயதிராஜ ஸப்ததியில் ஸ்டீரியோ அர்த்தம் கொடுக்கும் ஒரு பாடலை ச்லோகத்தை இப்போது நாம் பார்ப்போம்.

*சமிதோதய சங்கராதி கர்வ:*
*ஸ்வபலாதுத்தருத யாதவப்ரகாச: ।*
*அவரோபிதவாந் ச்ருதேரபார்த்தாந்*
*நநு ராமாவரஜ : ஸ ஏஷ பூய: ।।*

தமிழில் இதன் அர்த்தம்:

**சமிதோதய சங்கராதி கர்வ:**

பாணாசுரனின் பெண் உஷை. அவளுக்கும் அநிருந்தனுக்கும் (கண்ணனின் பேரன்) காதல். இதை அறிந்த பாணாஸுரன் இருவரையும் சிறைச்சாலையில் அடைக்க, கண்ணன் அவர்களை விடுவிக்க வர, சிவன், முருகன், அக்னி... என்று பலர் வரிசையாக எதிர்க்க... ஆழ்வார் இப்படிப் பாடுகிறார்:

*நேர்சரிந்தான் கொடிக் கோழி கொண்டான்★ பின்னும்*
*நேர்சரிந்தான் எரியும் அனலோன்★ பின்னும்*
*நேர்சரிந்தான் முக்கண் மூர்த்தி கண்டீர்★ அப்பன்*
*நேர்சரி வாணன் திண்தோள் கொண்ட அன்றே!*

முதுகுகாட்டி ஓடிய பாணாஸுரனை வெற்றி கொண்ட போது சேவலை கொடியாகக் கொண்ட முருகப்பெருமானும், அக்னியும், முக்கண்ணனான சிவபிரானும் எதிரே நிற்க முடியாமல் சாய்ந் தார்கள்.

முதல் அர்த்தம் = பாணாஸுர யுத்தத்தில் இவர்களின் செருக்கை ஒழித்தான் கண்ணன்.

இரண்டாம் அர்த்தம் == ஆதிசங்கரர் அத்வைதக் கோட்பாடுகளின் வாத ப்ரதிவாதங்களை முறியடித் தார் ஸ்ரீராமாநுஜர்.



**ஸ்வபலாதுத்தருத யாதவப்ரகாச:**

யயாதியின் மகன் யது. யயாதியின் சாபத்தால் யதுவிற்கு பட்டாபிஷேகத்திற்குத் தகுதி இல்லாமல் போனதால் அந்த குலத்துக்கே பட்டாபிஷேகம் இல்லாமல் கம்சனால் நலிவடைந்து தாழ்ந்து போய்விட்டது. நலிவடைந்த அந்த யது குலத்தில் கண்ணன் அவதரித்துத் தன் வலிமையால் கம்சனை கொன்று தாழ்ந்து போன யாதவர்களை கைதூக்கி யது குலத்தை பிரகாசப்படுத்தினான்.

உபநிஷத்துக்குத் தவறான அர்த்தங்களைப் போதித்த அத்வைதியான யாதவபிரகாசருக்குச் சீரிய அர்த்தங்களைக் கூறித் தெளிவித்து அவரையும் ஸ்ரீவைஷ்ணவனாக, தன்னிடமே தஞ்சம் அடையச் செய்தார் உடையவர்.

முதல் அர்த்தம் = யது குலத்தைத் தன் வலிமையால் பிரகாசப்படுத்தினான் கண்ணன்.

இரண்டாம் அர்த்தம் == ஸ்ரீராமாநுஜர் தன் அறிவின் வலிமையால் சிறந்த பொருளைக்

# ஸ்ரீராமாநுஜர் இயற்றிய 9 நூல்கள்

- ஸ்ரீபாஷ்யம்
- ஸ்ரீரங்க கத்யம்
- சரணாகதி கத்யம்
- வைகுண்ட கத்யம்
- வேதார்த்த ஸங்க்ரஹம்
- கீதா பாஷ்யம்
- வேதாந்த ஸாரம்
- வேதாந்த தீபம்
- நித்ய க்ரந்தம்

கூறி யாதவபிரகாசரை தன்னிடத்தில் சேர்த்துக் கொண்டார்.

**அவரோபிதவாந் ச்ருதேரபார்த்தாந்**

அபார்த்தாந் - பார்த்தனுக்குத் தேரோட்டும் ஸாரதி என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். பார்த்தன் - அர்ஜுனன். அ-பார்த்தான் அர்ஜுனனுக்கு எதிரியாக இருக்கும் கௌரவர்களின் கர்வத்தை அழித்தான்.

அப - அர்த்தான் - அபஸ்வரம் என்பது போல அப-அர்த்தம் - தவறான அர்த்தம். அதாவது வேதத்துக்குத் தப்பான அர்த்தம் சொல்லுபவர்களை அழித்தார் ஸ்ரீராமாநுஜர்.

முதல் அர்த்தம் = அ-பார்த்தர்களை அழித்தான் கண்ணன்.

இரண்டாம் அர்த்தம் == அப-அர்த்தங்களை அழித்தார் ஸ்ரீராமாநுஜர்.

**நநு ராமாவரஜ : ஸ ஏஷ பூய :**

அதனால் அந்தப் பார்த்தஸாரதிப் பெருமாளே ஸ்ரீராமாநுஜராக அவதாரம் செய்திருக்கிறார் என்று ஸ்தாபிக்கிறார் ஸ்வாமி வேதாந்த தேசிகன்.

**முக்கியமான ஐந்து இடங்கள்**

கிருஷ்ணனுக்கும் ஸ்ரீராமாநுஜருக்கும் மேலும் சில ஒற்றுமைகள் இருக்கின்றன. கண்ணனுக்கு முக்கியமான இடங்கள் ஐந்து: மதுரா (அவதரித்த இடம்), கோகுலம் (வளர்ந்த இடம்), துவாரகை (ராஜ்ய பரிபாலனம் செய்த இடம்), குருக்ஷேத்ரம் (உபதேசம் பண்ணின இடம்) மற்றும் இந்திரபிரஸ்தம் (அவ்வப்போது ஆச்வாசப் படுத்திக்கொண்ட இடம்).

அதே போல ஸ்ரீராமாநுஜரின் முக்யமான ஐந்து இடங்கள்: ஸ்ரீபெரும்புத்தூர் (அவதரித்த இடம்), காஞ்சிபுரம் (வளர்ந்த இடம்), ஸ்ரீரங்கம் (ராஜ்யத்தை நடத்திய இடம்), திருக்கோட்டியூர் (உபதேசம் ண்ணின இடம்), மேலக்கோட்டை (ஆச்வாசப் படுத்திக்கொண்ட இடம்).

கண்ணன் தூது போனது அனைவரும் அறிந்தது. ஸ்ரீராமாநுஜரும் தூது சென்றார். யாரிடம்? பெரிய பெருமாளும், தாயாரும் ஒன்றாக இருக்கும் பங்குனி உத்ஸவத்தின் போது கத்யத்ரயம் ஸாதித்து மோக்ஷத்தைப் பெற்றார்.

மீண்டும் ஒரு ஆழ்வார் பாசுரத்தை பார்க்கலாம்:

*செந்தழலே வந்து அழலைச் செய்திடினும்★*
*செங்கமலம் அந்தரம் சேர்*
*வெங்கதிரோற்கு அல்லால் அலராவால்★*

நெருப்புக்குப் பக்கம் தாமரையை வைத்தால் அந்த வெப்பத்துக்குத் தாமரை மலராது. அதற்கு ஸூர்யனுடைய வெப்பம் தான் தேவை.

அதே தாமரையைக் குளத்திலிருந்து எடுத்து நிலத்தில் போட்டால் ஸூர்யனால் மலர்த்த முடியாது. குளத்தின் தண்ணீரும் தாமரைக்கு அவசியம்.

ஜீவாத்மாவுக்கு ஜ்ஞானம் கொடுத்து மலர்த்துபவர் ஸூர்யனைப் போன்ற நாராயணன். ஆனால் அவர் எப்போது மலர்த்துவார்? தாமரை மலருக்குத் தண்ணீரின் சம்பந்தம் எப்படித் தேவையோ, அதே போல நமக்கு ஆசார்யன் ஸம்பந்தம் இருந்தால் மட்டுமே அது ஸாத்யம்.

ஸூர்யன், தண்ணீர் என்ற இரண்டும் சேர்ந்து தாமரை மலரும் போது (ஜ்ஞானம்) அந்த அனுபவம் அலாதியாக இருக்கும். அதைத்தான் ஸ்வாமி தேசிகன் நமக்கு அருளுகிறார்.

ஸ்ரீ:

# வேதபாராயண ஸபா

## 114 ஆண்டுகளாக வேதத்தின், பாகவதர்களின் தொடர் தொண்டில்...

**அறிமுகம்**

''வேதோகில தர்ம மூலம்'' - எல்லா தர்மங்களுக்கும் அடிப்படை வேதமே என்று கௌதமர்எனும்மஹரிஷிவேதத்தின்பெருமையைப் பரக்கக்கூறியுள்ளார். தர்மம் என்றால் நற்செய்கைகள். ஒருசெய்கை ஒருவருக்கு நல்லதாகப்படலாம். ஆனால் அதுவே பிறருக்குப் பிடித்தமில்லா மலிருக்கலாம். ஆகவே எல்லோருக்கும் பொதுவான வேதத்தைக் கொண்டேதான் நாம் தர்மங்களை அறிய வேண்டும் என்பதே மஹரிஷியின் திருவுள்ளம். மேலும் வேதமாவது பகவானின் மூச்சுக் காற்றாகும். இது புருஷர்களால் எழுதப்பட்டதன்று. ஆகவே அனைவர்க்கும் ஸமமான தர்மங்களையே போதிக்கும்.

வேதத்தின் பெருமையை ஆயிரம் தலைகள் கொண்ட ஆதிசேஷனாலேயே கூறமுடியாது. வேதமும் அநாதி. அதில் அறியப்பட்ட ஸநாதன தர்மமான ஸ்ரீக்ருஷ்ணனும் அநாதி. ''நான் எல்லா வேதாதங்களாலும் அறியப்படுகிறேன்'' என்று கண்ணனே கீதையில் அறுதியிடுகிறான்.

மேலும் மிக்க வேதியர் வேதத்தின் உட்பொருளை நிற்கப் பாடி மயர்வற மதிநலம் பெற்ற ஆழ்வார்களின் பாசுரங்களும் வடமொழி வேதத்திற்கு இணையானது என்பது நாதமுனிகள் போன்ற ஆசார்யர்களின் நிர்வாஹம். இவ்வர்த்தத்தை ''வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கை'' என்றும் ''இருக்குவாய் முனிக்கணங்களேத்த யானுமேத்தினேன்'' என்றும் ஆழ்வார்கள் தாமே அருளிச்செய்துள்ளார்கள்.

வடமொழி வேதமும் தமிழ் வேதமும் திவ்ய தம்பதிகளின் திருக்கண்களுக்கு ஒப்பாகும். இந்த வேதத்திற்கும், வேதத்தின் சுவைப்பொருளாம் திருமகள் கேள்வனாம் ஸ்ரீநிவாஸனுக்கும் வேதாந்தாசார்யரான ஸ்வாமி ஸ்ரீதேசிகனுக்கும் ஒருசேர ஸேவை செய்வது என்பது நம் ஸந்நிதியில் மட்டுமே ஸாத்யமாகும்.

இந்த கைங்கர்யத்தை ஒரு நூற்றாண்டிற்குமேல் செய்து வருவது என்பது மிகப்பெரிய கைங்கர்ய மாகும். இதை இவ்வளவு வருடங்களாக செவ்வனே செய்து வருகிறது நம் ஸந்நிதியைச் சார்ந்த ''வேதபாராயண ஸபா''.

**வேதபாராயண ஸபாவின்**
**தோற்றம் மற்றும் நோக்கம்**

கடந்த 1905ஆம் ஆண்டு வேதபாராயண ஸபா அந்தநாளில்மாடமாமயிலையில்எழுந்தருளியிருந்த பல மஹான்களால் தொடங்கப்பட்டது. நம் ஸந்நிதியில் எம்பெருமான் எழுந்தருள்வதற்கு முன்பாகவே இந்த வேதபாராயண ஸபை



வேதபாராயண ஸபா
நூற்றாண்டு விழாவில் (2005)
திவ்ய தம்பதிகள்




வேதபாராயண கோஷ்டி

தொடங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ஸபையினர், முதலில் ஸ்வாமி ஸ்ரீதேசிகனின் வார்ஷிக உத்ஸவத்தில் பல வேதவிற்பன்னர்களையும் திவ்யப்ரபந்த அதிகாரிகளையும் கைங்கர்யத்தில் அலங்கரிக்கச் செய்து அவர்களுக்கு ததீயாராதனமும் ஸம்பாவனையும் செய்வித்துவந்தனர். பின்பு பெருமாளின் ப்ரஹ்மோத்ஸவம் தொடங்கப்பட்ட பின்பு அந்த உத்ஸவத்திலும் தங்களை அந்வயப் படுத்திக்கொண்டது இந்த ஸபை.

**நூறாவது வருஷத்திய கொண்டாட்டங்கள்**

கடந்த 2005ஆம் ஆண்டு மாசிமாதம் ச்ரவண நக்ஷத்ரத்தில் வேதபாராயண ஸபா தன்னுடைய நூறாவது ஆண்டு விழாவை மிகவும் உன்னதமான விதத்தில் விசேஷமாகக் கொண்டாடியது. மாசி 20 முதல் 24 வரை (மார்ச் 4 - 8, 2005 வரை) நடைபெற் இவ்விழாவின் சிறப்பம்சங்கள்:



- ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்பெருமாளுக்கும் ஸ்ரீஅலர்மேல்மங்கைத்தாயாருக்கும் ஸ்வாமி ஸ்ரீதேசிகனின் அத்யக்ஷத்தில் ஐந்து நாட்களிலும் விசேஷ லக்ஷார்ச்சனை செய்வித்தது.
- இந்த உத்ஸவத் தை அஹோபிலமடம் 45ஆம் பட்டத்தை அலங்கரித்த ஸ்ரீமத் வில்லிவலம் அழகியசிங்கர் மற்றும் ஸ்ரீரங்கம் பெரியாச்ரமம் ஸ்ரீமத் ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன் ஸ்வாமிகள் போன்ற ஆசார்ய வர்யர்களின் மங்களாசாஸனங்களால் சிறப்புறச்செய்தது.
- அலர்மேல்மங்கைத் தாயாருக்கு ஸ்வர்ணத்தில் ஸ்ரீசடாரி ஸமர்ப்பித்தது.
- ஐந்து நாட்களிலும் ப்ரதி வேளையிலும் நூற்றுக்கணக்கான உபய வேதவித்வான்கள் மற்றும் இதிஹாஸ, புராண, க்ரந்த பாராயண விற்பன்னர்களைக் கொண்டு அத்புதமான ரீதியில் பாராயணம் (கன பாராயணம் உள்பட) செய்வித்து அவர்களுக்கு உன்னதமான ஸம்பாவனை செய்தருளியது.
- நூறாவது ஸம்வத்ஸரத்தை முன்னிட்டு அத்புதமான முறையில் ஐந்து நாட்களும் பாகவத ஆராதனம் (ததீயாராதனம்) செய்தது.
- உத்ஸவத்தின் அங்கமாக மஹாவித்வான்களின் மிகச்சிறந்த வ்யாஸங்கள் அடங்கிய விசேஷமான ஒரு நூற்றாண்டு மலரை வெளியிட்டது.

**நம் ஸந்நிதியில் ஸபை ப்ரதி வருடம் செய்தருளும் கைங்கர்யங்கள்**

பாகவதர்களுக்குத் தொண்டு செய்வது பரமனுக்குத் தொண்டு செய்வதைக் காட்டிலும் ஏற்றம் என்பது மூதுரை. ஏனென்றால் பரமனுக்கு அந்த பாகவதர்களிடத்தில் மிக்க ப்ரேமை. ஆதலால் அவனும் பாகவதத் தொண்டே மிக உயர்ந்தது என்றிருப்பவன்.

உபய வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமானான ஸ்ரீநிவாஸனின் திருப்பாதம் பணிந்து அவனுடைய வைகாசிப் ப்ரஹ்மோத்ஸவத்திலும், நம் தேவஸ்தானத்தின் நாயகரான ஆசார்ய வள்ளலும், நாவலரும் தென் வடமொழி நற்பொருள் பெற்ற நம்பியான ஸ்வாமி ஸ்ரீதேசிகனுடைய புராட்டாசி அவதார தின திருநக்ஷத்ர மஹோத்ஸவத்திலும் பத்து நாட்களிலும் இரண்டு வேளையிலும் ததீயாராதனம் செய்வித்து அந்த உபய கோஷ்டியில் அலங்கரித்தருளும் மஹநீயர்களுக்கு உத்தமமான முறையில் ஸம்பாவனை செய்விப்பது வேதபாரயண ஸபையின் தலையாய பணி.

இந்தத் ததீயாராதனமாவது ஸ்ரீமத்ராமாயணத்தில்

எவ்வாறு பரத்வாஜ மஹரிஷி செய்வித்தாரோ அதேபோன்று ஷட்ரஸத்துடன் உத்ஸவத்தில் ஒவ்வொறு தினமும் விசேஷ தளிகையுடன் இன்றைக்கும் செய்விக்கின்றனர்.

செங்கண் திருமுகத்துச் செல்வத்திருமாலால் எங்கும் திருவருள் பெற்று யாவரும் இன்புற்றிருக்க வேண்டும் என்னும் உயரிய எண்ணத்துடன் நம் தேவஸ்தானத்தில் கண்ணனின் மாதமான மார்கழி முப்பது நாட்களிலும் அவனுடைய ப்ரியையான அணிபுதுவைப் பாவையான பட்டர்பிரான் கோதையின் செஞ்சொற்கவியான திருப்பாவையின் ஸாரார்த்தங்களை நல்ல பண்டிதர்களைக் கொண்டு உபந்யாஸம் செய்வித்து பக்தர்களை செவிமடுக்கச் செய்வதும் நம் வேதபாராயண ஸபையின் மற்றுமொரு முக்கியக் குற்றேவல்.

மேலும் தை மாதத்தில் புஷ்ய நக்ஷத்ரத்தில் பெருமாளுக்கும் தேசிகனுக்கும் புறப்பாடு செய்வித்தலும், ஸ்வாமி ஸ்ரீதேசிகனின் ப்ரஸித்தி பெற்ற தனியனான ''ராமாநுஜ தயாபாத்ரம்'' எனும் தனியனின் அவதார தினமான ஆவணி ஹஸ்தத்தன்று ஸ்வாமி ஸ்ரீதேசிகனுக்கு ஆஸ்தான உத்ஸவம் உபயமும் வேதபாராயண ஸபையின் முக்கியமான கைங்கர்யங்களாகும்.

இதே போன்று நம் ஸந்நிதியில் ப்ரதி வருடமும் ஆவணி அவிட்டத்தன்று பெரியோர்களைக் கொண்டு அத்யயனஹோமத்தை செய்வித்தலும், நம் ஸந்நிதியில் நடைபெறும் பவித்ரோத்ஸவத்திலும், இராப்பத்து உத்ஸவத்திலும் மற்றும் க்ருத்திகா மண்டல பாராயணத்தில் வேதபுருஷர்களுக்கு ஸம்பாவனை செய்வதும் இந்த ஸபையின் இதர செயல்களாகும்.

**ஸபையின் மற்ற விசேஷ கைங்கர்யங்கள்**

இந்த ஸபை சில விசேஷ கைங்கர்யங்களையும் செய்து வருகிறது. அவையாவன:

- ஸபையின் 80வது வருட பூர்த்தியை முன்னிட்டு ஸ்வாமி ஸ்ரீதேசிகன் அருளிய ஸ்தோத்ரமான தேவநாயக பஞ்சாஸத்தை மஹாவித்வான் ஸ்ரீ உ.வே. ஸ்ரீவத்ஸாங்காசார்யர் ஸ்வாமியைக் கொண்டு அத்புதமான உரையுடன் வெளியிட்டது.
- ஸ்ரீநிவாஸப்பெருமாளின் 80வது மற்றும் 90வது ப்ரதிஷ்டா தின பூர்த்தி உத்ஸவங்களில் ததீயாராதனம் செய்தது.
- கடந்த இருபத்துமூன்று வருடங்களாக ஸ்ரீ உ.வே. நாட்டேரி லக்ஷ்மீநரசிம்ஹாசார்யர் (ஸ்ரீஹரி) ஸ்வாமியைக் கொண்டு தினமும் திவ்யப்ரபந்த வகுப்புகளை நடத்தி, இதன் பயனாக இருபதிற்கும் மேற்பட்ட திவ்யப்ரபந்த அதிகாரிகளுக்கு நம் ஸந்நிதியில் கைங்கர்யம் செய்துவர ப்ராப்தமானது.
- இதேபோன்று க்ருஷ்ண யஜுர் வேத நித்ய கைங்கர்யம் செய்யும் ஸ்வாமிகளுக்கு யதா சக்தி கௌவரவிப்பது.
- 2013ம் ஆண்டு நம் திருக்கோயிலில் நடைபெற்ற ஸம்ப்ரோக்ஷணத்தில் ஐந்து நாட்களிலும் சிறப்பாக ததீயாராதனம் செய்தது.
- நம் ஸந்நிதியில் நம் தர்சனத்தின் ஸ்தாபகரான ஸ்ரீபாஷ்யகாரருடைய ஆயிரமாவது திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தில் பத்து நாட்களிலும் மிகவும் உயரிய முறையில் ததீயாராதனம் செய்தது.

இவ்வளவு பழமையையும் பெருமைகளையும் உடைய வேதபாராயண ஸபையின் கைங்கர்யங்கள் மேன்மேலும் வளர நாமும் திவ்யதம்பதிகளின் கருணையையும் ஸ்வாமி ஸ்ரீதேசிகனின் அநுக்ரஹத்தையும் வேண்டி நிற்போம்.

**தொகுப்பு:**
**ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி**



அருளிச்செயல் கோஷ்டி

ஶ்ரீ:

# பாட்டீ! ஒரு கதை சொல்லேன்...

ஸ்ரீ உ.வே. நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

**ஸுமதி:** (ஸேவிச்சுட்டு) பாட்டீ ! வேதாந்தாசார்ய மங்களத்துலே, ரெண்டு ச்லோகங்களுக்கு அர்த்தம் சொன்னேள்; மேலே சொல்லுங்கோ, பாட்டீ.

**ஸுந்தரராஜன்:** நானும் வந்துட்டேன், பாட்டீ! (ஸேவிக்கிறான்)

**பங்கஜம் பாட்டீ:** ஸ்வாமி, விச்வாமித்ர கோத்ரத்திலே அவதாரம் பண்ணார்-னு முந்தய ச்லோகத்திலே குலப்பெருமையைச் சொன்னார். குலத்தோட ஆரம்பம் நன்னாயிருக்கறது ஸரி; அப்பறமும் வரவாளுக்கு அப்படியே இருக்கணமா, என்ன? அப்படீன்னு கேக்கப்போரேளேன்னு ஸ்வாமிக்கு முந்தினவர் யார் / எப்படிப் பட்டவா-ன்னு அடுத்த ச்லோகத்திலே காட்டறார் ....

‘‘பிதா யஸ்ய அனந்தஸூரி: புண்டரீகாக்ஷ யஜ்வந: |
பௌத்ரோ ய: தநய: தோதாரம்பாயா: தஸ்ய மங்களம்||’’ – னு.

இவரோட அப்பா, அனந்தாசார்யர் என அழைக்கப்படுபவரான அந்தண ச்ரேஷ்டர்; பகவத்-பாகவத கைங்கர்யத்திலே காலத்தைக் கழித்த இவருக்கு ஆதிசேஷனின் பெயர் ரொம்பவும் பொருத்தமானது. முன்-உதாரணமா இருந்து, தன் பிள்ளைகளை நடத்திச் செல்பவர்தான் தந்தை, அப்படீன்னுவா. இது, ‘தந்தையும் நீயே முந்தி நின்று அளித்தலின்’ அப்படீன்னு மும்மணிக்கோவை-ன்ற ப்ரபந்தத்திலே ஸ்வாமி விளக்கியது. தாத்தாவோ, ‘புண்டரீகாக்ஷர்’ என்னப்பட்ட ‘யஜ்வா’ – சாஸ்த்ரங்கள் விதித்தபடி யாக-யஜ்ஞும் செய்பவர்-ன்னு, மரியாதையோட சொல்லுவா. இவரோட அம்மாவின் திருநாமம் ‘தோதாரம்பா’ என்பது. பெற்றதோடு மற்றுமின்றி, நல்வழி-ல அரவணைத்துக் காத்தவர் – இதுவும், ‘தாயும் நீயே சாயை(நிழல்) தந்து உகத்தலின்’ அப்படீன்னு அதே ப்ரபந்தத்திலே சொல்லப்பட்டது.

**ஸுந்தரராஜன்:** இது, சாஸ்த்ரம் காட்ற DNA Test போல இருக்கு, பாட்டீ!

**ஸுமதி :** ‘விரை ஒண்ணு போட, சுரை ஒண்ணு மொளைக்குமா?’ –ங்க்ற பழமொழிய ஞாபகப் படுத்தறது, பாட்டீ !

**பங்கஜம் பாட்டீ:** (சிரிச்சிண்டே) குறும்புக்கார பசங்களா! இப்படி, அந்த குலத்தோட முதலும்-ஸமீபமும் சொன்னதால, மொத்தகுலத்தவரையும் குறிக்கறது.

பாட்டீ! முக்குறும்பு – அதாவது அறிவு-செல்வம்-குலம் இவை உடையவன்-னு கர்வம் – கூடாது-ன்னு சொல்வாளே; போன ச்லோகத்திலே ஸ்வாமியின் அறிவைப் பத்தியும்; இந்தச்லோகத்தில் குலத்தைப் பத்தியும் உயர்வா சொல்லியிருக்கே, பரவால்லையா?

**பங்கஜம் பாட்டீ:** நல்ல கேள்வி. இந்த மூணும் உடையவன்-னு, தான்தான் சொல்லிண்டு திரியக்கூடாதே தவிர, மத்தவா ஸ்தோத்ரமா சொல்லலாம்-னு அர்த்தம். இங்கே தேசிகன், தான் பீத்திண்டா தப்பே தவிர, வரதாசார்யர் சொன்னா அது ஸ்தோத்ரமாகும்.

ஸரி, அடுத்த ச்லோகத்துக்குப் போவோமா. இதுவரை, தேசிகனின் அவதாரச் சிறப்பை சொன்னாரோல்யோ; இனி அதைப்பத்தி, பெரியவாள்ளாம் எப்படி பேசிக்கறா அப்படீன்னு சொல்றார் ...

‘‘வேங்கடேச அவதார: அயம், தத் கண்டாம்ச:
அதவா பவேத் |
யதீந்த்ராம்ச: அதவா இதி ஏவம் விதர்க்யாயாஸ்து
மங்களம் ||’’

அதாவது – இவர் ஸ்ரீநிவாஸப் பெருமானின் அவதாரமாத்தான் இருக்க வேணும். அல்லது, ஸ்ரீநிவாஸனின் திருமணி அவதாரமோ; இல்லாட்டா, யதிகளில் சிறந்த ஸ்ரீபாஷ்யகாரரின் அம்சமாகப் பிறந்தவரோ, என்று பலவாறாக தங்களுக்குள் பேசிக் கொண்டு அநுபவிக்கிறா – என்கிறார்.

**ஸுமதி:** ஒருத்தரை புகழும்போது, மிகைப்படுத்திச் சொல்வாளே, அப்படிச் சொன்னதா, பாட்டீ!

**பங்கஜம் பாட்டீ:** இல்லம்மா; இப்படி மூணு விதமா நெனைக்கர்த்துக்கு காரணம் இருக்கு. ஒவ்வொண் ணாப் பாப்போம் - ப்ரமாணங்கள் ஸ்ரீநிவாஸனை, வேத-வெற்பு-ன்னு சொல்றதோல்யோ; ஸ்வாமியும், வேதாந்தத்தை நிலை நாட்டியவர்; ஆகவே. இருவருக்கும் ஜ்ஞானம்-செயல்பாடு, இவை ஒண்ணா இருக்கறதால, இவர் ஸ்ரீநிவாஸனின் அவதாரம், அப்படீன்னு சொல்றா.

அடுத்து, இவர் தாயார், ஸ்ரீநிவாஸனின் திருமணியை விழுங்கறதா கனவு கண்டார் எனவும், அதன் விளைவா ஸ்வாமியை கர்ப்பம் தரித்தார் எனவும் வரலாறு சொல்றது. மேலும், ஒரு மணியோட சிறப்பே, நல்ல நாதம்தானே; இது அதோட நாக்கின் திறனைப் பொறுத்தது, இல்லையா. ஸ்வாமியின் நாவன்மையைக் கண்ட பெரியவா, இவர்க்கு தார்க்கிக-ஸிம்ஹம் என்ற விருதை அளித்ததைக்கொண்டு, இவர் ஸ்ரீநிவாஸனின் திருமணி அவதாரம் எனச் சொல்வதும் பொருத்தம்தான்.

இன்னும், இவர் ஸ்ரீபாஷ்யகாரரோட அவதாரம்-னு சொல்லலாம்; எப்படீன்னா - பாஷ்யகாரர், தர்சன-ஸ்தாபகர்; இவர் ''பகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்தாரண ஸார்வபௌமர்''. அவர், வைராக்ய சீலரான யதி-ன்னா இவர், க்ருஹஸ்தராக இருந்துண்டே வைராக்ய-சீலர். இருவருடைய ஞானமும் ஒப்புயர்வற்றது. இப்படி, ஒற்றுமைகளை அடுக்கிண்டே போகலாம்.

ஆக, இப்படி ஒப்பிட்டு அநுபவிப்பது ரஸம்தானே!

ஸுந்தரராஜன்: அது ஸரி பாட்டீ; இப்படீல்லாம் சொல்லலாமா? இதுக்கு ப்ரமாணம் உண்டா?

**பங்கஜம் பாட்டீ:** ஆஹா, நன்னா உண்டு; இப்போ, பாரதத்தை எடுத்துக்கோ. இது லக்ஷக்கணக்கான ச்லோகங்கள் கொண்ட பெரிய இதிஹாஸம். இதைப் பண்ணினவர் வ்யாஸ-பகவான்-ன்னு அழைக்கப்படும் க்ருஷ்ணத்வைபாயநர். இவரை பகவான் நாராயணன் அப்படீன்னே தெருஞ்சுக்கோ- ன்னு விஷ்ணுபுராணம் புகழ்றது. காரணம் சொல்றது - 'இவ்வுலகில் மஹாபாரதமாம் ஒப்பற்ற இதிஹாஸத்தைச் செய்ய வேற யாரால இயலும்!' – என. இதப்போலத்தான் நைனாராசாரியரும், ஸ்வாமி தேசிகன் விஷயமா இங்கே சொல்றார். ஸந்தேஹம் தீந்ததா?

**ஸுந்தரராஜன்:** நான் நம்பறேன், பாட்டீ! ஸந்தேஹப்படல. காரணம் என்னன்னு தெரிஞ்சுக்கலாம்-னு ஒரு குறுகுறுப்பு. இப்ப பாருங்கோ, ஒரு புது நல்ல விஷயம் தெரிஞ்சுண்டோம்; நம்பிக்கையும் இன்னும் ண்ணுணூணிணஞ்–ஆ ஆறது.

**ஸுமதி:** பாட்டீ ! ஸ்வாமி தேசிகனப் பத்தி சொல்லச்சே, அவரை ''பகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்தாரண ஸார்வபௌமர்'' – ன்னேள்; அப்படீன்னா என்ன?

**பங்கஜம் பாட்டீ:** ஒங்களுக்கு புரியும்படியா, சின்னதா சொல்றேன் – இந்த உலகத்தையெல்லாம் தனக்கு உடலாகக்கொண்டு / தான் அவற்றுக்கு உயிராக இருக்கும் எம்பெருமானான, ஸ்ரீமந்நாராயணன் ஒருவன்தான் தத்துவம், அப்படீங்கற உயர்ந்த 'விசிஷ்டாத்வைத'க் கொள்கையைக் கொண்டது, 'ராமாநுஜ ஸித்தாந்தம்'. இப்போது இந்த பதத்துக்கு, பொருள் பார்ப்போம்; விசிஷ்டம் – அப்படீங்கறத்துக்கு, 'கொண்டது/ உடையது' – ன்னு அர்த்தம்; இதை விளக்கறது 'இந்த உலகத்தையெல்லாம்..... உயிராக இருக்கும்' என்ற கீழ்ச்சொன்ன பதங்கள். 'அத்வைதம்' என்பதற்கு, இரண்டல்ல எனப்பொருள்; இது 'எம்பெருமானான, ஸ்ரீமந்நாராயணன் ஒருவன்தான் தத்துவம்' என்பதாகக் கீழே சொல்லப்பட்டது.

அடுத்து, 'நிர்தாரண' அப்படீன்னா, 'நிச்சயித்து / தீர்மானமாகச் சொல்வது' எனப்பொருள். இப்படி, இக்கொள்கையைக் கலக்கமறச் சொன்னவர், ஸ்வாமி தேசிகன். அதனால, அவரை 'ஸார்வபௌமர்' - அதாவது 'அரசர்கோன்' என்று சொல்லுவா. பொருத்தம்தானே!

**ஸுந்தரராஜன்:** நன்னா புரிஞ்சுது, பாட்டீ! இந்த பெரிய (பயமுறுத்தற) பதத்தை எப்படி சின்னச் சின்னதா விண்டு, பதம்-பதமா அர்த்தம் சொல்லி புரிய -வெச்சுட்டேள்! you are really great!

தப்பா நெனசுக்காதங்கோ, பாட்டீ! என் பழைய கேள்வி; ஸ்வாமி தேசிகன்தான், ராமாநுஜ ஸித்தாந்தத்தை கலக்கமில்லாது சொன்னார், அப்படீன்னு எத வெச்சுச் சொல்றேள்?

**பங்கஜம் பாட்டீ:** (சிரிச்சிண்டே) இத நான் சொல்லலை, கண்ணா; அடுத்த ச்லோகத்திலே, வரதாசார்யரே ஸாதிக்கிறார். Suspense. அத அப்பறமா சொல்றேன். இப்ப பரீக்ஷைக்குப் படிக்கப் போங்கோ.

(இருவரும் பாட்டியை ஸேவித்துவிட்டுக் கிளம்புகிறார்கள்)

(தொடரும்)




*With Best Compliments from:*

**Atithyaa Homes**

**BUILDERS/PROMOTERS since 1995**

**5, Sivakamipuram 1st Street, Thiruvanmiyur, Chennai - 41.**

**Our present prestigious project is the construction of Gangai Kondaan Mantapam for Sri Vedantha Desikar Devasthanam, Mylapore.**


**SVDD thanks Atithyaa Homes for sponsoring this month's issue of Desika Sandesam**

சதயம் புறப்பாடு




ச்ரவணம் புறப்பாடு






ஸ்ரீமத் ராமாயணம் ஹரிகதா




ஸீதா, லக்ஷ்மண,
ஆஞ்ஜநேய ஸமேத ஸ்ரீராமர் ஆஸ்தானம்